A/L 88
பிரிவு II
Physics - திரு.சுகர்ணம்
Chemistry - திரு. நிர்மலநாதன்
Zoology - திரு. நாகராஜன்
Botany - திரு. சுகந்தரன்
Pure & Applied Maths
திரு. நல்லையா
விபரங்கட்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L 88
பிரிவு III
விரைவில் ஆரம்பம்
விபரங்கட்கு:—
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

ஞாயிறு 1 மாலைப்பதிப்பு — சுபகிருது வருஷம் வைகாசி மீ 5 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 நம்மான் பிறை 9 (19-05-1986) UTHAYAN : A DAILY TAMIL DAILY விலை ரூ.1.55

ஆனையிறவிலிருந்து

நடை பவனியில் யாழ். நோக்கி சிப்பாய்கள் விரைவு

சுமார் நாற்பது கனரக வாகனங்கள் சகிதம்

— அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், மே 19

நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் ஆனையிறவு முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 22 கவச வாகனங்கள் உட்பட சுமார் 40 வாகனங்கள் சகிதம் நடை பவனியாக யாழ்ப்பாணம் நோக்கி வருகிறார்கள்.

நேற்று இரவு 7.30 மணி வரை இயக்கச்சி, பளை ஆகியவற்றைத் தாண்டி புதுக்காடு என்ற இடம் வரை அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்று அறிய வந்தது.

சனிக்கிழமையன்று ஆனையிறவு முகாமை விட்டு வெளியேறிய இராணுவ வண்டித் தொடர் போராளிகளின் எதிர்த் தாக்குதல்களை அடுத்து அன்றைய தினமே முகாமுக்குத் திரும்பி

பிச் சென்றது

எனினும் நேற்று இராணுவ வண்டித் தொடர் முகாமை விட்டு வெளியேறி சங்கானை வழிப் யாணம் நோக்கி முன்னேறி வந்துகொண்டிருந்தது

நேற்றும் இயக்கச்சி, புதுக்காடு ஆகிய இடங்களில் போராளிகள் வண்டித் தொடர் மீது பலத்த தாக்குதல்களை நடத்தினார்கள் என்று அறியவந்தது

இந்தத் தாக்குதல்களின் போது இரண்டு கவச வாகனங்கள் பலத்த சேதமடைந்ததாகச் சொல்லப்படுகிறது

நேற்று ஆனையிறவு முகாமை விட்டு வெளியேறிய சிப்பாய் ஞ்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

2 வது நாளாக காவலூரிலும் கடும் மோதல்

நல்லூர், மே 19

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றும் இரண்டாவது நாளாக போராளிகள் – இராணுவத்தினர் மோதல்கள் நடைபெற்றன.

கடந்த இரண்டு தினங்களாக காவலூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போராளிகள் – சிப்பாய்கள் மோதல் மோதல் நேற்று மேலும் தீவிரமடைந்தது.

காவலூர் பகுதியைச் சுற்றி வளைத்த வடக்கிலிருந்து சிப்பாய்களை நோக்கி போராளிகள் திருப்பித் தாக்கினர். இரு தரப்பினருக்கும் இடையில் பல மணி நேரம் மோதல் நிகழ்ந்தது.

இச் சம்பவங்களினால் வேலாயுதம் ஒன்றும் ஐந்து வீடுகளும், துறைமுக வளாகமொன்றுக் கடைகளும் சேதமடைந்தன.

இச் சம்பவங்களினால் பீதி கொண்டு ஊர்காவற்றுறை பட்டினத்தை அண்டியுள்ள கருங்கோச் சேர்ந்த மக்கள் அயல் கிராமங்களை நோக்கி இடம் பெயர்ந்திருக்கின்றனர்.

திருமலையில் 150 பேர் கைது

திருகோணமலை நகரில் இன்றுகாலை பகுதியில் பொலிஸார் நேற்றுக் காலை முதல் பலத்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தேடுதலின் முடிவில் இரண்டு லொறிகளில் சுமார் 150 பேர் வரையில் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

'முறுகி நகர்' முன்னணியில் ஆதரவு செய்யப்பட்ட பின்னரே அவர்கள் விடுவிக்கப்படுவர் என்று சொல்லப்படுகிறது

யாழ். நகரில் நேற்று யுத்த பூமியின் காட்சி!

யாழ்ப்பாணம், மே 19

நேற்று யாழ்ப்பாண நகரம் யுத்தபூமியாக மாற்றப்பட்ட பூமியாகக் காட்சியளித்தது.

தமிழ் ஈழ ஆயுதங்களுடன் போராளிகள் நகரை முற்றுகையிடுகும் பெரும் எண்ணிக்கையிலானோர் காணப்பட்டனர்.

நேற்று நகரில் நிலவிய சகஜநிலை சூழ்நிலையால் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

போராளிகள் கட்டுமானமாக நடமாடிக் கொண்டிருந்தனர். அவர்களது வாகனங்களும் நகரில் ஓடித் திரிந்தன.

கோட்டை முகாமைச் சுழவுள்ள யாழ் நகரப் பகுதிகளில் ஆங்காங்கே முக்கிய கேந்திரங்களில் மண் மூடைகள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

அவற்றுக்கு அருகே தமிழ் ஆயுதங்களுடன் போராளிகள் காணப்படுகின்றனர்.

கோட்டை முகாமை விட்டு சிப்பாய்கள் வெளியேறமுற்றுகையிட்டவர்கள் வெளியேறவிடாது தடுக்குவதற்கு முன்னேற்பாடாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

அம்பிலாந்துறை சம்பவம்

ஆறு தமிழர்களினதும் பிரேத பரிசோதனைகள் நேற்று முகாமில்

மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு அம்பிலாந்துறையில் கட்டுக் கொலைப்பட்ட ஆறு தமிழர்களினதும் பிரேத பரிசோதனைகள் கடுமையான இராணுவ முகாமில் நேற்று நடைபெற்றன.

மூன்று சடலங்களிற் துப்பாக்கிச் சூடு இறந்த துமைத்துச் சென்றிருந்தது.

மற்றைய மூன்று சடலங்களிற் சூடுகள் தங்கியிருந்தன. சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிறி.ஞ் சவிக்கம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

அம்பிலாந்துறைச் சம்பவத்தில் போது 31 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாவும்–

அங்குள்ள முருகன் ஆலயம் சேதமாக்கப்பட்டதாவும் மட்டக்களப்பு பிரசைகள் குழுவின் ஒருவரினால் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தீவுப்பகுதி போக்குவரத்தும் ஸ்தாபிதம்

நல்லூர், மே 19

தீவுப்பகுதிகளான சரவணை போக்குவரத்துகளும் நேற்று ஸ்தாபிதமாகின.

டக்ளஸ் பாலத்திற்கு அருகில் அகப்பட்டுக் கொண்ட இராணுவத் தொடர் வண்டி நேற்று முழுதும் அப்பாதையில் நிலைகொண்டிருந்ததே இதற்குக் காரணம்

இதனால் கேரளை, புங்குடுதீவு, அனலைதீவு ஆகிய தீவுப்பகுதிகளான சரவணை போக்குவரத்துக்கும் நேற்று நிறுத்தப்பட்டன.

சுபநேரம்

19-05-1986
திங்கட்கிழமை

சுபநேரம்:
11.52 முதல் 1 21 வரை
ராகுகாலம்:
7 21 முதல் 8 52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நோன்பு நேரம்

சஹர்:- 4 18
மஃரிப்:- 6.21

மனிதரே மாமனாய் மறைவிற காலத்திலே, மா காணாதி போறது ஒன்டும் புதுமையிலைப் பாருங்கோ....

முப்படைத் தாக்குதல் நேற்றும் முறியடிப்பு

புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே. 19

முப்படைத் தாக்குதல்களை தாம் வெற்றிகரமாக நேற்று முறியடித்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருக்கிறது.

இதுகுறித்து புலிகள் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தொடர்ந்து நேற்றும் இரண்டாவது நாளாக பல்வேறு இராணுவ முகாம்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பல இடங்களை நோக்கி இன ஒழிப்பிற்காகப் புறப்பட்டனர்.

பலாலி, ஆனையிறவு, கோட்டை, நாவாந்துறை முகாம்களிலிருந்தும் பல இராணுவ முகாம்களிலிருந்தும், கரவெட்டி கடற்படை முகாமிலிருந்தும் கொம்பர்சந்தி, ஹெலி கொப்டர்கள் சகிதம் மக்களை அழிக்கும் நோக்குடன் இராணுவத்தினரும், கடற்படையினரும் ஆகாயப் படையினரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாமனாய் மறைந்த மா மூடைகள்

கொழும்பு, மே 19

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு ரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட மா மூடைகளில் 48 மூடைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ வண்டிகள் பண்ணைப்பாலத்தில் காலை முதல் இரவுவரை

யாழ்ப்பாணம், மே 19

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குச் சொந்தமான நான்கு கனரக வாகனங்கள் நேற்றுக் காலை 6 - 30 மணி முதல் இரவு வரை பண்ணைப் பாலத்தில் தரிந்து நின்றன.

பிரதான வாகனங்கள் யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை பண்ணைப் பாலம் வழியாக ஊர்காவற்றுறைப் பக்கமாக புறப்பட்டுச் சென்றவை ஆகும்

நேற்றுக் காலை 6 - 30 மணி முதல் வண்டித் தொடர் கோட்டை முகாம் பக்கமாக திரும்பவோ அல்லது ஊர்காவற்றுறை பக்கமாக செல்லாது நடுவழியில் தரிந்து நின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஷெல்தாக்குதல்: இளைஞன் பலி!

கொட்டடியில் சம்பவம்

நல்லூர், மே 19

யாழ். கோட்டை முகாமில் இருந்து நேற்று 'ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஒரு இளைஞன் பலியானான். மூவர் காயமடைந்தனர். வீடொன்று சேதமடைந்தது.

நேற்றுக்காலை 6–30 மணியளவில் கோட்டையிலிருந்து வெளியே நிலைகொண்டிருந்த சிப்பாய்களை நோக்கி போராளிகள் தாக்குதல் நடாத்தினர்.

இதனால் கோட்டை முகாமில் இருந்த சிப்பாய்கள் கொட்டடிப் பகுதியை நோக்கி 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

இதனால் விரசிங்கம் வசந்தகுமார் (13 வயது) என்ற இளைஞன் மரணமானான்.

வெளி மாவட்ட பஸ் சேவைகள்

நேற்றும் நடக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 19

வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ் சேவை நேற்றும் நடைபெறவில்லை.

முதல்நாள் கொழும்பிலிருந்து வரவேண்டிய பஸ்களும் நேற்று வந்து சேரவில்லை.

ஆனையிறவுக்கு அப்பாலான பகுதிகளும் வாரந்தோறும் தமது சேவையை நிறுத்திக்கொண்டன.

இ.போ.ச. பகுதி நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வரை மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இன்றைய பஸ் சேவை குறித்து தீர்க்கமான எதுவித முடிவும் கூற முடியாத நிலையிலிருப்பதாக, தனியார் பஸ் உரிமையாளர்களும், இ.போ.ச. யாழ் மத்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் இராணுவம் தரிப்பு

2-வது நாளாக மோதல்

பலாலி, இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை இரண்டாவது நாளாக சிப்பாய்கள் வெளியே வந்தனர்.

இதே வேளை நேற்று முன்தினம் பலாலியில் இருந்து புறப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் முகாமிட்டுள்ளனர்.

இவர்களை நோக்கிப் போராளிகள் நேற்று தாக்குதல் நடவடிக்கை ஒன்று மேற்கொண்டனர்.

சிப்பாய்களும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் சில பொதுமக்கள் காயமடைந்து தெல்லிப்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் சிப்பாய்கள் அதிகாலை வெளியே வரவிடாது பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

புதுடில்லியிலிருந்து மூவர்குழு சென்னையில் எம். ஜி. ஆருடன் அவசரபேச்சு

இந்திய வெளிவிவகார அமைச்சர் அலோசனைக் கமிட்டித் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி, பலிதலைவர் அமைச்சர் பி. வி. நரசிம்மராவ், இலங்கை அமைச்சர் நிமலரூபன் ஆகியோர் அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்னை விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனை இவர்கள் சந்தித்து, இலங்கை அரசியல் யோசனைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள்

பிரதமர் ராஜீவ் காந்தியின் பணிப்பின் பேரில் தான் இவர்கள் சென்னை விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

கூட்டணி யோசனைகளை அரசுஏற்றால்போராளிகள் ஆதரவு தருவர்-அமிர்

சென்னை, மே 18

தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுமானால் அதற்குத் தமிழ் மக்களின் பெரும் பான்மையினரும் தமிழ்ப் போராளிகளும் ஆதரவு தருவர்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு கலந்த பேட்டியில் தெரிவித்தார்.

திரு அமிர்தலிங்கம் மேலும் சொன்னதாவது:

நியாயமானதாக நடப்பதற்கு ஜெயவர்த்தனா அரசை இந்தியா இணங்கச் செய்ய வேண்டும். அல்லது ஏதாவது ஒரு

அமிர்தலிங்கம்

எழுதியில் இந்தியா நேரடியாகத் தலையிடவேண்டும்.

அதற்கு இந்தியா தயாராக இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது

நாம் சொல்வது ஒன்றே சொல்லை நிறுத்தக் கூடியவாறு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே

தமிழருக்கு இப்போது தேவை கௌரவமும் சமாதானமுமே.

இன்று தமிழர் மரணங்களை விதிக்கப்பட்ட இனமாக வாழுகின்றனர். இந்த நிலையை தமிழர் எவ்வளவு காலத்துக்கு அனுபவிப்பது?

அப்படி ஒர் இணக்கம் வந்தால் அதை அமுல் நடத்த இந்தியா உத்தரவாதம் தர வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வாஞ்லை ரூபவாஹினி ஊழியர்

கட்டாய லீவில் அனுப்பப்பட்டதற்கு கடும் கண்டனம்

கொழும்பு, மே.19 இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ரூபவாஹினி ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான தமிழ் ஊழியர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டதற்கு கொழும்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சாளர் ஒருவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

யு.என்.ஐ. செய்திஸ்தாபனம் இவரைத் தொடர்பு கொண்டு இதனைத் தெரிவித்தது.

இது ஓர் இனத்தவரை பிரித்துக் காட்டும் நடவடிக்கை ஆகும். தமிழர்களுக்கு மேலும் கஷ்டங்களைக் கொடுப்பதே இதன் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. எம். கே. கே. பெரேரா இதுபற்றி யு என் ஐக்கு கருத்துத் தெரிவிக்கையில் சகல ஊழியர்களிடமிருந்தும் இராஜிநாமாக்கள் கிடைத்ததால் இந்த நடவடிக்கையை எடுத்ததாகத் தெரிவித்தார்.

பவள விழா காணும் உரும்பராய் இந்து

இன்று நிகழ்ச்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 19 உரும்பராய் இந்துக் கல்லூரியில் பவளவிழாக் கொண்டாட்டங்கள் இன்று திங்கள் முதல் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் திருமுறை மாநாடு பொருட்காட்சி, கலைநிகழ்ச்சிகள் என்பன இடம் பெறும்.

திருமுறை மாநாடு இன்று காலை 8 மணிக்கு கல்லூரி அதிபர் செ. கிருபாலசிங்கத்தலைமையில் கல்லூரிப்பிரார்த்தனை மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக யாழ் கல்வி அபிவிருத்தி இரா. சந்திரசேகரம் கலந்து கொள்வார்.

ஆரம்ப நிகழ்ச்சியாக உருத்திராட்சம் விநாயகர் ஆலயத்தில் இருந்து திருமுறைக் கலசங்கள் கூடும் பிரார்த்தனையுடன் ஊர்வலமாக கொண்டுவரப்படும்.

கொப்பாய் வட்டாரக் கல்விப்பணிமனை ஆவணக்காப்பாளர் மகேஸ்வரனின் கேற்றுவார்.

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், இ. கலாநிதிகளுக்குரிய ஆசிரியர் ஆசிரியைகளை வழங்குவர்.

பேராசிரியர் சபிலுயை மூர்தி நிருவாகத்தினதும் எனும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இவ்விழாவிற்கான ஓராண்டு பிரதமகுரு இ. கலாநிதி வாகுருக்கள் கொண்ட ஆட்டு போர்த்தி கௌரவிக்கப்படுவதுடன் சிவ நெறிப்புலவர் தம்பி முத்து தம்பிராசா ஆகியோரின் திருமுறைத் தொகுப்பு நூல் ஒன்றும் வெளியிடப்படும்.

கல்லூரி மாணவ மாண விகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

22 ஆம் திகதி காலை 8 30 மணிக்கு பொருட்காட்சி ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக பிரதமக்கல்வி அதிகாரி க. சந்திரசாமியும் சிறப்பு விருந்தினராக விஞ்ஞானக் கல்வி அதிகாரி பா. சி. சர்மாவும் கலந்து கொள்வார்கள்.

பாடசாலைகளுக்கான பண்ணிசைப் போட்டி

வட்டுக்கோட்டை, மே 19 யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டியும் இவ்வாண்டு ஜூன் மாத 12 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் நிந்த மகளிர் கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பாடசாலை, வட்டாரம், மாவட்டம் என்ற மூன்று நிலையில் நடத்தப்படவுள்ள மாவட்டரீதியில் நடத்தப்படும் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

பாடசாலை நிலையில் பெறும் போட்டிகள் யாவும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிவடைந்து பெறுபேறுகள் வருமாறு விபரங்களுடன் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அதிபர்கள் தத்தமது வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வட்டார நிலைப் போட்டிகள் யாவும் ஜூன் 27 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி அதில் முதல் இடங்களைப் பெறும் மாணவர்களின் சகல விபரங்களுடனும் ஜூன் 30 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக திரு. சு. கணேஷ்பிள்ளை வட்டாரக் கல்வி அதிகாரி (சங்கீதம்), கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் யாவும் கீழ் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்டு 1 பாலர் பிரிவாகவும், ஆண்டு 2, 3 ஆரம்ப பிரிவாகவும், ஆண்டு 4, 5 கீழ்ப்பிரிவாகவும் ஆண்டு 6, 7 மத்திய பிரிவாகவும் ஆண்டு 8, 9, 10 மேற்பிரிவாகவும், ஆண்டு 11 12 13 அதிமேற் பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் சம்பந்தமான கற்றறிதுபம் ஒன்றை யாழ் மாவட்ட சைவ பாடசாலை அதிபர்களுக்கும் வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கும் கடாசாயம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சந்தரவிக்கிரமன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வளவு

க. பரராசசிங்கம் ஞாபகார்த்த சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

காலம்:

இன்று (19-5-86) திங்கள்

நேரம்:

பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரை

திரு. ந. இராஜநாயகம்

(அச்சக முகாமையாளர் - உதயன்)

அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இடம்: No 9, பொன்னம்பலம் வீதி, கல்லூரிப்பண்ணை, யாழ்ப்பாணம்.

டாக்டர்: கஸ்தூரியார் வளவு க. பரராசசிங்கத்தின் முக்கிய புதல்வன் டாக்டர் ப. இரகுநாதன் R.S.M.P. (Cey.)

குறிப்பு: 93/21, இந்து கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலும் தொடர்ந்து இயங்கும்.

பாக்கியராஜ் வெற்றியின் இரகசியம் என்ன?

பாக்கியராஜின் கொள்கைகள், அந்த ஏழு நாட்கள், நூறாவது நாளையொட்டி, முந்தானை முடிச்சு போன்ற படங்கள் தெலுங்கிலும் டப்பிங்கானதிலும் இந்தியிலும் வெற்றி வாகை சூடிய படங்கள்.

இந்தித் திரையுலகில் இருந்து தூக்கி எறியப்பட்டும் திக்கற்ற இளைஞன் ஆனால் சமூகத்தில் ஒரு சூப்பர் விஷயராகத் திகழ்கிறார்.

அதற்கு பாக்கியராஜின் 'தாறாந்தின்னு போச்சு' படத்தின் இந்திப் வடிவமான 'மொனாயத்' படத்தின் வெற்றிதான் காரணம்.

தமிழில் வருகிற சரக்கினை புரிந்து, சோளத்தில் நூறு நாட்களுக்கு மேல் ஓடிய 'முந்தானை முடிச்சு'வின் இந்திப் பதிப்பு 'மாக்டாரிஜ்' இந்தி படவுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

புரடியூசர் எம். ஜி. ஆரும் பேரனின் தாய்மார்களின் சருத்தை அறிந்து அவர்களுக்கு ஏற்றாற் போல் படங்களைத் தரவதில் பாக்கியராஜ் வல்லவர்.

கதையை மட்டும் நம்பி கண்ணியமாகப் படம் எடுப்பதால் தான் பாக்கியராஜ் படங்களுக்கு இன்ப தாய்மார்களின் மத்தியில் நல்ல வரவேற்பு ஒவ்வொரு படத்திற்குப் பின்னும் புகழிக் ஆயிரமாயிரம் அடிகளை வளரும் பாக்கியராஜ் தனது இந்த நிலைக்குக் காரணமாக நாக்கு யார் என்பதை நன்கு அறிந்தவர்.

அரசுக்தான் மக்களையும் ரசிகர்களையும் ஆதர் தெரிகிறார் சவ்வளவோ வேலைகளுக்கு இடையேயும் பாக்கியராஜ் தனது ரசிகர்களின் கடிதங்களுக்குப் பதில் போடத் தவறுவதுமில்லை.

'பிரிகிறது வரதி' லீலை படத்தில் நாட்டு வைத்தியராக கதிமுக நாகேஷ், இன்று தமிழ்த் திரையுலகில் முடிசூடா மன்னனாக விளங்குவதன் இரகசியம் இதுதான்.

பல வெற்றிகளுக்கு இடையேயும் புகழ் போதை தலைக்கேறி நடந்து கொள்ளாமல் நிதானமுடனாய் இருக்கும் பாக்கியராஜ் தமிழ்ப் படவுலகின் ஒளி விளக்காய் பிரகாசிக்கிறார்.

இன்னும் ஆயிரம் பல வாண்டுகள் ஒளிவீசி சாதனைகளைப் புரியவண்டும் என்பதுதான் ரசிகர்களின் விருப்பமாகும்.

வடக்கிலிருந்து

கப்பல்களில் வந்த நானூறு சிப்பாய்கள்

கொழும்பு மே 19 வடமாகாணத்துச் சென்ற இரண்டு கப்பல்களில் 52 நவீன கவச வாகனங்கள் சென்றனவாம். 400 சிப்பாய்களுடன் அந்த கப்பல்களில் போய்ச் சேர்ந்தனர் என்று நம்பிக்கையாகத் தெரிய வந்திருக்கிறது.

கொழும்புக்கு ஆறு கப்பல்களில் 'பொருள்கள்' வந்தன்ன என்றும் அறிய வருகிறது.

இவற்றுடன் இரண்டு அதிவேக விசைப்படகுகளும் கொழும்பு வந்து சேர்ந்தன.

பலாலி: 2 பாடசாலைகள் மூடப்பட்டன

பலாலி, மே 19 ஆயுதப் படையினரின் கெடுபிடிகளைத் தொடர்ந்து பலாலி வடமேற்கு பகுதியில் ஒரு பாடசாலை மூடப்பட்டுள்ளது. மற்றொரு பாடசாலை ஆவ்விடத்தில் இயங்க முடியாமல் வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள பலாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (சாதாரண பாடசாலை) மூடப்பட்டு அதற்கு அதிபத்த ஆசிரியர்கள் வருத்தமிளர்கள் அதன் விதிவிலாசத்துக்கும், அதிபர், உதவி ஆசிரியராக மனிலிருந்து ஞானசேகரவித்தியாலயத்துக்கும் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் கல்வியில் கலைந்த ஸ்ரீ வேற்பிள்ளை வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டு தனியார் கட்டடமொன்றுக்குமாறியுள்ளது.

திடற்புலத்தின் அபிவிருத்தி குறித்து

அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மே 19 திடற்புலம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றி திடற்புலம் இளைஞர் மன்றம் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

1969 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிரவரவரி-ஆக்கவேலி விதி திருத்தப் பட்டமைக் உள்ளது மாட்டு வண்டியே போக முடியாத அளவுக்கு வீதி மோசமான நிலையில் உள்ளது.

மின்சார வசதி கிடைக்கும் என்றும் கூறியும் இன்னும் திடற்புலம் கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்வில்லை. கி. மின்சாரி விளக்கில் கிடைப்பதில் விவசாயத்துறை அபிவிருத்தி காணும்.

வேலைபற்ற கிராம இளைஞர்க்கு வேலை வாய்ப்பளிக்க தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவேண்டும்.

புங்குடுதீவு வட்டுக்கோட்டைக்குப் பகுதியில் ஒரு நூல் நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வைத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

உடனடியாக பெரிய தாக்குதல் இல்லை - சேபால ஆட்டிகல

வடக்கிலிருந்து ஆயுதங்கள், தருணங்கள் கடுமையாக அனுப்பப்படுகின்றன. ஆனால் நிகழவாரிகள் மீதான பெரிய தாக்குதல் உடனடியாக ஆரம்பிக்கப்பட மாட்டாது.

இப்படிப் பாதுகாப்பு அமைச்சர் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல பி.பி.சி. கொழும்பு செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

புதுக்கிளிநொச்சியில் நடக்கின்றன பேச்சுக்கள் சமாதானமாக நடப்பதற்குப் பாதகமாக நாம் நடந்து கொள்ளமாட்டோம் ஆனால் இப்போது பெரிய அளவிலான தாக்குதலில் அரசு ஈடுபடாது.

இப்படி அமைச்சர் செயலாளர் சேபால ஆட்டிகல கொண்டார்.

இந்த வேளை —

தெற்கில் குண்டுத்தாக்குதல் ஏதாவது நடந்தால் வடக்கில் முழு அளவில் ஆயுதப்படைகள் தாக்குதலில் ஈடுபடும் என்று பாதுகாப்புடன் தொடர்புள்ள சிரேஷ்ட உயர் அதிகாரி ஒருவர் பிரபல பத்திரிகை ஆசிரியர் ஒருவரிடம் தெரிவித்திருந்தார்.

அந்த அதிகாரி அரசாங்க உயர்மட்டங்களுக்கு மிக நெருங்கிய உறவு உள்ளவர்.

அந்தச் செய்தி 'தெற்கில் குண்டு வெடித்தால் வடக்கில் முழு அளவில் தாக்குதல்' என்ற தலைப்புடன் 17-5-86 ஆம் திகதி சஞ்சிகையில் வெளியானது தெரிந்ததே.

இளவாலையில் இளைஞர் முயற்சியில் கல்லுடைக்கும் தொழிற்சாலை

யாழ்ப்பாணம், மே 19 வேலையில்லாத் திண்டாட்டத்தை முற்றாக முழுதாகப் போக்கடிக்க வேண்டும் எமது மண்ணில் கிடைக்கக்கூடிய பொருள்கள் மூலம் ஏதாவதாவதுபெற முயல வேண்டும் இன்று தனியார் நிறுவனங்களில் வன செலவு இழக்கின்றன. ஆனால் இளவாலை இளைஞர்களின் திறமையினாலும் ஆர்வத்தினாலும் இன்று இத்தொழிற்சாலை உருவாகியுள்ளது. அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது.

இவ்வாறு இளவாலையில் கல்லுடைக்கும் தொழிற்சாலையின் ஆரம்ப விழாவிற்கு தலைமை வகித்த உரை நிகழ்த்துகையில் சித்தங்கேணி மைன்ஸ் கழகத் தலைவர் திரு. விஜயரத்தினம் தெரிவித்தார்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

புங்குலக்கட்டுவனில் சைவ சமய பரீட்சை

இந்து இளைஞர் மன்றம் நடத்தும்

யாழ்ப்பாணம், மே 19 மாணவர்களின் சமய அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் வருடாவருடம் சைவசமயப் பரீட்சைகளை நடத்தி வரும் புங்குலக்கட்டுவன் இந்து இளைஞர் பேரவையினர் இம்முறை இப்பரீட்சைகளை ஜூன் மாதம் 14 ஆம் திகதி நடத்தவிருக்கின்றார்கள்.

புங்குலக்கட்டுவன் அ. த. க. பாடசாலையில் இப்பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்ற வேண்டியவர்கள் பின்வரும் பிரிவுக்கட்டுப்பாடுகளுக்குமமைவதமாக விண்ணப்பங்களை யூன் மாதம் முதலாம்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர், இந்த இளைஞர் மன்றம், புங்குலக்கட்டுவன் தெற்கு, கல்லாவி என்ற விலாசத்துக்கு அனுப்ப மாறு கோரப்படுகின்றார்.

முன்றாம் நாலாம் வகுப்பு மாணவர்கள் பாலர் பிரிவிலும், ஐந்தாம், ஆறாம் வகுப்பு மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும், ஏழாம் எட்டாம் வகுப்பு மாணவர்கள் மத்திய பிரிவிலும், ஒன்பதாம் பத்தாம் வகுப்பு மாணவர்கள் மேற்பிரிவிலும் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த மாணவர்க்கும் வகுப்புரீதியாகத் திறமையுள்ள முன்று மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பொழுது வெற்றிலை அல்லது ஆலிலைக்கும் கையெழுத்துப் பெற்று நாம் படிக்கும் வகுப்புக்கு உறுதி செய்வது அவசியமானதாகும்.

புங்குலக்கட்டுவன் ஆலயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் திருவிழாவன்று பரிசில் வழங்கப்படும் என செயலாளர் தெரிவித்தார்.

விமானங்கள்! விமானங்கள்!!

பலாலி, மே, 19 பலாலியில் விமானங்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. பொம்பர் விமானங்கள் உட்பட ஆறு விமானங்கள் சனியன்று பலாலிபகுதியில் அடிக்கடி பறப்பதைக் காண கூடியதாகவிருக்கிறது

பாசறை வகுப்பு

கைதடி, மே 19 கைதடி கல்லி கொவிக்கான நிலையத்தில் குழவிகள் அளவீடுகள் பற்றிய பாசறை வகுப்பு ஒன்று நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறஇருக்கிறது.

உபொ. (உயர்தர) தரவில் கற்கும் மாணவர்களின் நன்மை கருதியே இப்பாசறைவகுப்பு நடத்தப்படுகிறது.

சாவகச்சேரி இந்த அதிபர் திரு. கே. எஸ். குமாரன் தலைமையில் நடைபெறும் இவ் வகுப்பை சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. அந்தோனிராசா ஆரம்பித்துவைப்பார். சாவகச்சேரி கல்லூரி ஆசிரியர் திரு. க. பரமசுந்திரன் ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

பாம்பு கடித்து மரணம்

கண்டை நிலவு, மே 19 நித்திரை செய்து கொண்டிருந்த எட்டு மாதக் குழந்தை ஒன்று விஷப்பாம்பு கடித்து துடி துடித்து மரணமானது.

இப்பிரதேச சம்பவம் மண்டை நிலவு தெற்குப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

திருச்சபை அன்பளிப்பு

புங்குடுதீவு மே 19 சென்னிறந்த திருச்சபையில் யாழ்ப்பாண அந்தியப் சாதனத்தின் பேராயர் சோருட்திரு. ஜே. அம்லவானந் நிலப்பகுதி அதி முகாமில் உள்ளோருக்கு உடுபுடவைகளையும், பாய், மா, வகைகளையும் அன்பளிப்பாக வழங்கினார்.

கேணல் சேர்—கைதி விடயம் தலைவரும் மத்திய மாகாணித்தியாலய விடுதிக் கட்டிடத்தில் அமைந்துள்ள இந்த முகாமில், திருமலை, வவுனியா பகுதி களிலிருந்து வந்துள்ள 11 அகதிக் குடும்பங்கள் தங்கியுள்ளனர்.

அதிபர் திரு. க. பரமசுந்திரன் ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஜேர்மன்
- பிரான்ஸ்
- டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

வாஸ்போர்ட், விசா, பொண்ட் (Bond)

ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அலெக்ஸ் (மகேஸ் கன்னுர் அகதிகள்) மானிப்பாய்.

குறிப்பு:

ஜேர்மன், கனடாவுக்கு ஆகிய நாடுகளுக்கு முற்பணம், வாஸ்போர்ட் தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

இரு பண்புகள் ஒரு விலாவிடத்தில் சேர்ந்திருக்காது
அவை உலகோத்தமமும், துர்குணமுமாகும்.
-தமி (மாலை)-

உதயன்

தலையங்கம் - அரசியல் - அறிவியல்

இன்று 15 வைகாசி ஞாயிற்றுக்கிழமை தொலைபேசி 24805
பிரசுரம், நிர்வாகம் 22078
மாலைப்பதிப்பு 19 05 60 த. பெ. 23

பாடசாலைகளில் பாசறைகள் வேண்டாம்

பாராளுமன்றம் ஆரிய பயிற்சிக் கலாசாலையில் இராணுவ முகாம் நிரந்தரமாகவே நிறுவப்படலாம் என்பதான முன்னேற்பாடுகள் எல்லாம் இப்போது 'துடிப்பாக' நடந்து வருகின்றன.

ஊர்காவற்றுறை செல்ற அக்ராஸிஸ் கல்லூரியில் கடற்படையினர் முகாமிட்டுள்ளனர்.

அதேபோல இன்னும் பல பாடசாலைகளில் ஆயுதப்படை முகாம்கள் நிறுவப்படலாம் என்ற செய்தி பலமாக அடிபடுகிறது.

தமிழ் மக்களை நேரடியாகத் தாக்குவதோடு நிற்காது மறைமுகமாகத் தாக்கும் சைங்கியத்திலும் அரசாங்கம் இப்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

எரிபொருள் கட்டுப்பாட்டை, தட்டுப்பாட்டைக் கொண்டு வந்து தமிழ் மக்களின் ஜீவனோபாயத்திலும், வயிற்றிலும் அடிப்பதற்கு அரசு எப்படிச் சதி செய்கிறது என்பதனை இதே பத்தியில் நேற்று ஆராய்ந்திருந்தோம்.

கல்வி நிலையங்களில் ஆயுதப் படைகளை நிலைகொள்ளச் செய்வதும் அதே பாணியில் அமைந்த — ஒரே வகை சார்ந்த — மறைமுகத் தாக்குதல் நடவடிக்கையே ஆகும்.

கல்வி நிலையங்களில் படைகளை அமர்த்துவதால் வகுப்பில் மாணவர் கல்வி பாதிக்கப்படுவது நிச்சயம்.

ஆரியர் தட்டுப்பாடு, கட்டடப் பற்றாக்குறை ஆய்வுகூட, நூல்நிலைய வசதியின்மை, பேருந்து வரத்து வசதிக் குறைவு, பாடநூல் பற்றாக்குறை என்று இன்னோரன்ன குறைபாடுகளால் வடபகுதி மாணவர்களின் கல்வி ஏற்கனவே மழுங்கடிக்கப்பட்டிருக்கிறது.

தென்னிலங்கைப் பாடசாலைகளுக்கு வேண்டிய வசதிகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுகின்றன. மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன.

அவற்றோடு ஒப்பிடும்போது வடபகுதியின் கல்வி வளர்ச்சி கேலிக்குரியதாகக் கணிக்கப்படுகின்றது. பாடசாலைகளின் வளர்ச்சி புறக்கணிக்கப்படுகின்றது. கல்வித்துறையிலும் அரசின் பாரபட்சம் தலைவிரித்தாடுகிறது.

அது போதாது என்று பாடசாலைகளை படைகளின் பாசறைகளாக்கி தமிழ் மாணவரின் கல்வியை மேலும் பாழடிக்க அரசு திட்டமிட்டுச் செயலாற்ற தொடங்கி இருக்கிறது.

தமிழ் மக்களின் இயக்கத்தை - வாழ்க்கைச் செலுத்தப்பாட்டை - எல்லா வகைகளாலும் நசுக்கி, ஒடுக்கி அவர்கள்மீது அடிமைத் தனியைத் திணிக்க-ஸ்திரப்படுத்த அரசு முயற்சிக்கிறதோ என்ற சந்தேகமும் எழுகின்றது.

தமிழர்கள் தங்கள் உரிமைகளைக் கேட்கிறார்கள் என்பதை வழங்க அரசுக்கு விருப்பமில்லை ஆகையால் அவர்களுக்கு எல்லா விதத்திலும் தொல்லைகளையும், கஷ்டங்களையும் கொடுத்து, அவர்களை முடங்கச் செய்து, "இந்தா வேண்டுமானால் இந்தப் பிச்சையைப் பிடி" என்று சொல்லி நியாயத்தித்து தலைக்கு விருப்பமான தீர்வைத் திணிக்கும் ஒரு சந்திரமோசகம் இந்த நோடி, மறைமுகத் தாக்குதல்கள் அமையலாம்.

ஆனால் இருபதாம் நூற்றாண்டில் வாழும் மனிதன் எவனும், நிரப்பந்தத்தின் பேரில் அடிமையாக வாழவோ, அல்லது உரிமை இழந்தவனாக வாழவோ ஒருபோதும் ஒப்பமாட்டான் அதனினும் மடிந்து போகவே விரும்புவான்.

இதனை அரசாங்கம் உணர்ந்திருக்குமோ என்னவோ! அரசின் சிந்தனையும் செயலும் எப்படி இருக்கும் என்று எவரும் மதிப்பிடமுடியாத வகை அதன் பேச்சும் செயலும் வேறுபடுகின்றன.

எது எப்படியாயினும், பாடசாலைகளில் படை முகாம்களை நிறுவும் செயலை அது உடனே நிறுத்த வேண்டும்.

ஆலயம், பாடசாலை, ஆஸ்பத்திரி ஆகியவை தவிர்க்கப்படுவது மிகவும். அரசியல், இராணுவச் சதுரங்கங்களை ஆடுவதற்கு அவற்றைப் பயன்படுத்தக்கூடாது.

வடக்கு, கிழக்கில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதால் மேலதிக படை முகாம்களை பாடசாலைகளில் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்வாறு சொல்லி அரசு தனது செயலை நியாயப்படுத்த முயற்சிக்கலாம்.

அரசாங்கம் வடக்கு, கிழக்கில் படைகளை வைத்துப் போராட்டம் நடத்த விரும்புவதானால் மக்கள் வாழாத காட்டுப் பிரதேசங்களில் தனது முகாம்களை நிறுவலாம். மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து முகாம்களை அகற்ற வேண்டும்.

உண்மையாகவே அது தமிழ்ப் பொதுமக்களை அழிக்க விரும்பவில்லை என்றால், அவர்களுக்கு கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை என்றால், அவர்களோடு சோதனைக்கும் வேதனைக்கும் உள்ளாக்க விரும்பவில்லை என்றால் நாம் மேலே கூறினதை விருப்பத்துடன் செய்ய எவ்வித தடையும் இருக்காது.

நற்பணிச் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், மே 19
இலங்கைக் சோஷலிஸ்ட் கட்சியின் மக்கள் நற்பணி மன்றங்கள் அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக கருத்திரவாதத்தில் இம்மாதம் முதலாம் திகதி நற்பணிச் சங்க கூட்டம் நடைபெற்றது.

பி. தாமோதரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொழிலாளர் சம்பளவளர்ச்சி தலைவர் வ. பாலசிங்கம், நற்பணிச் சங்கச் செயலாளர் வா. செல்லையா ஆகியோர் உரையாற்றினர்.

"நிரைமலைவில் நடைபெறும் கொண்டாட்டங்களை ஒழித்துக்கட்டி மக்கள் ஆலயப்புக்கலாம், இன்னுமர் ஆலயப்புக்கலாம் முன்னர் கோவிலும் என்று மக்கள் நற்பணிச் சங்க ஆலயப்பணி ம. ஞ. த. நாகலிங்கம் தமதுரையில் குறிப்பிட்டார்.

பாக். எல்லையில் பதற்றம்

ஆப்கான் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

இஸ்லாமாபாத், மே18

பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஆப்கானிஸ்தானின் 'மிக்' விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் வேறு சில விமானங்களை, பாகிஸ்தான் விமானங்கள் தமது எல்லைக்கு அப்பால் விரட்டி அடித்தன.

பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சு இதனை அறிவித்தது.

இந்தச் சம்பவத்தினால் ஆப்கான் — பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஆறு வருட காலத்துக்குள் பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் கடப்பட்ட முதலாவது விமானம் இது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அதிகாலை வெளியேறி, பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் அடைக்கலம் புகுந்துள்ள சில வாழும் பகுதிகளை நோட்டமிட்ட இந்த விமானங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும்—

தமது பிரதேசத்திற்குள் நிகழ்ந்த விமான அத்து மீறல் சம்பவம் பற்றி குறித்த தம்மால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையை ஆப்கானிஸ்தான் அலட்சியம் செய்து வந்திருப்பதாகவும் பாகிஸ்தான் குற்றம் சாட்டியது.

பாகிஸ்தானில் எல்லை 16 ராக விமானங்களை இந்தத் தாக்குதலுடன் தொடர்பாகத் தேடி வரப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் இச் சம்பவம் பற்றி எதுவித கருத்தும் வெளியிடவில்லை.

வெளி உலகில்

இந்தோனேஷிய குண்டு சூத்திரதாரி நாட்டிலிருந்து தப்பினார்

ஜகார்த்தா, மே.18

இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் கடந்த புதன்கிழமை, அமெரிக்கத் தூதரகத்தின் மீதும் ஜப்பானிய தூதரகத்தின் மீதும் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரியான ஜப்பானியர் ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டாராம்.

ஜப்பான் உச்மொரசூடுக்கு அதிகாரி தெரிவித்தவே இந்த முயற்சி என்று குண்டு வைத்தவர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவுக்கு ஏற்பட்டிருக்கும் உயிரழிவுக்கு ஏற்ப பட்டிருக்கலாம் எனவும் கட்டடங்கள் சிறிது பாதிப்படைந்தன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உளவாட்டப்பட்ட பாஸ்போர்ட்டுடன் இந்தோனேஷியாவினுள் வந்த ஜப்பானியர் தமது வேலை முடிந்ததும் நாட்டைவிட்டு வெளியேறி விட்டாராம்.

ஜப்பான் உச்மொரசூடுக்கு அதிகாரி தெரிவித்தவே இந்த முயற்சி என்று குண்டு வைத்தவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்து குறித்து சூரியசக்தி ஆடுப்புகள்

சென்னை மே 18

தமிழக அரசின் ஆதரவில் நடத்தப்படும் மதிய சத்துணவுத் திட்டத்தில் சூரிய சக்தியில் பாவிக்கக்கூடிய அடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியன் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்ட இவ்வகை அடுப்புகளை மிகுந்த வெற்றியளித்துள்ளதாக தமிழக உணவு அமைச்சர் திருச்சி சௌந்திரராஜன் தெரிவித்தார்.

இவை பனை ஓலைப் பதித்தப்பட்ட பிளைவர் வியாக்கு மறுபகுதி மக்களும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

தட்சர் இஸ்ரவேல் விஜயம்

லண்டன் மே 18

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தட்சர் இவ்வார முடிவில் மூன்று நாள் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு இஸ்ரவேல் செல்கிறார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஒருவர் இஸ்ரவேலுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை.

மத்திய மெற்கு நாடுகளில் இஸ்ரவேல் கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு பிரிட்டிஷ் ஆதரவு இருப்பதை இந்த விஜயம் எடுத்துக்காட்டுவதாக ஐரந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகிரட் தட்சர் 1975 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த பொழுது ஒருதடவை இஸ்ரவேலுக்கு சென்றிருந்தார்.

வளைகுடா மோதல்

ஈரானின் பல பட்டினங்கள் ஈராக் வசமாயின

பக்தாத் மே 18

ஈரான்—ஈராக் எல்லைப் பகுதியில் நேற்றுத் தரை சார்ந்தமாக நடைபெற்ற மோதலில் ரப்பர் கண்காட்சியில் இலங்கை

சிங்கப்பூர் மே 18

கண்காட்சியில் சிங்கப்பூரில் நடைபெற்ற ரப்பர்—பிரான்சிக் - கண்காட்சி நடைபெற்றது.

மொத்தம் 19 நாடுகள் கலந்துகொண்ட இக்கண்காட்சியில் 135 காட்சியறைகள் இடம்பெற்றன.

தமக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளதாக ஈராக் இன்று தெரிவித்தது.

ஈராக் நாட்டின் கரைப் பகுதியிலுள்ள நான்கு முக்கிய பட்டினங்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும், கமார் 150 சதுரமைல் பரப்புதமாக கைப்பற்றப்பட்டதாகவும் ஈராக் மேலும் தெரிவித்தது.

ஈரானிய சிப்பாய்கள் பலர் நேற்றைய மோதலில் பலியானதாகவும் தமக்குச் சொந்தமான பிரதேசங்கள் ஈராக் வசமாயின எனும் ஈராக் அறிக்கையை மறுத்துரைத்தன.

தமிழக பிரதிநிதி

சென்னை, மே 18

தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக புதுடில்லியில் திரு. எம். பட்டுராஜன் கடமையாற்றுவார்.

கலைமாமணி அந்தஸ்தில் இவர் ஒர் குண்டு காலம் பணிபுரிவார். மதுரை மாநகராட்சியில் மேயராக இவர் முன்னர் பணியாற்றினார்.

அப்புஸ்வாமி காலமானார்

சென்னை, மே 18

பிரபல தமிழ் விஞ்ஞான எழுத்தாளர் பெ. நா. அப்புஸ்வாமி தமிழ் நாட்டுக் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 92.

தமிழில் விஞ்ஞானத் துறை சம்பந்தமான நூற்களை எழுதி பெருக் புகழ் பெற்றவர் திரு. அப்புஸ்வாமி.

வடக்கு, கிழக்கில்

படையினரைத் தாக்கினால் விமானத் தாக்குதல் நிச்சயம்

கொழும்பு, மே 19

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஆயுதப்படையினர் ரோந்து, தேடுதல்களில் ஈடுபடும்போது தீவிரவாதிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினால் விமான தாக்குதல்கள் நடத்தப்படும்

ஆயுதப்படையின் பேச்சாளர் — அதிகாரி ஒருவர் கொழும்பில் இதனைத் தெரிவித்தார்.

ஆயுதப்படையின் தேடுதல், நடவடிக்கைகள் முகாமை கற்றியுள்ள பகுதியில் மட்டுமல்ல, தீவிரவாதிகள் இருக்கும் இடங்களைத் தேடியே தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெறும்.

தீவிரவாதிகள் படையினரை ஒளிந்திருந்து தாக்கிவிட்டு தப்பிச்செல்லுகின்றனர் அத்த இடங்களில் விமான தாக்குதல்கள் நடத்தப்படும்

ஆயுதப்படையின் பேச்சாளர் — அதிகாரி ஒருவர் கொழும்பில் இதனைத் தெரிவித்தார்.

ஆயுதப்படையின் தேடுதல், நடவடிக்கைகள் முகாமை கற்றியுள்ள பகுதியில் மட்டுமல்ல, தீவிரவாதிகள் இருக்கும் இடங்களைத் தேடியே தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெறும்.

தீவிரவாதிகள் படையினரை ஒளிந்திருந்து தாக்கிவிட்டு தப்பிச்செல்லுகின்றனர் அத்த இடங்களில் விமான தாக்குதல்கள் நடத்தப்படும்

ஆயுதப்படையின் பேச்சாளர் — அதிகாரி ஒருவர் கொழும்பில் இதனைத் தெரிவித்தார்.

நல்லூர் இளைஞர் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 19

நல்லூர் இந்து இளைஞர் மன்றக் கட்டடம் வைத்திய கலாநிதி சோ. சண்முகலிங்கம் அவர்களது நினைவுநாளில் சட்டத்தரணி இ பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஆலயங்களில் இராணுவத்தினர் ஏற்பட்டமை வருந்தக் கண்டனம் தெரிவிப்பது என்தீர்மானிக்கப்பட்டது

கவி பி விலைவாசிக்கு ஒரு விழா எடுப்பது நற்பிரதேசை சூழ்நிலைக்கு ஏற்றது எனவும் முடிவு செய்யப்பட்டது

நூல் வெளியீடு

ஆளுவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் 68வது ஆண்டு விழாகுப்பிழாவுக்குப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமை வகித்த சங்கத்தலைவர் திரு. வை. க. சிற்றம்பலம் அவர்களால் எழுதப்பட்ட கும்பிழாவின் விநாயகர் 'நான்மணி மாலை' என்ற நூலும் வெளியிடப்பட்டது.

நூலின் ஆய்வுரையை பண்டிதர் மு. கந்தையாவும் பண்டிதர் க. நாகலிங்கமும் வழங்கினார்கள்.

நூலின் முதற் பிரதியை கோவில் தர்மகர்த்தா சபைத்தலைவர் திரு. க. நாகநாதர் நூல் வெளியீட்டாளர் திரு. வி. சுவாமிநாதனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

ஆயுதப்படையை பலப்படுத்திய பின்னரே இந்தியாவுடன் பேச்சு

பாதுகாப்புப் படைகளை பலப்படுத்திக் கொண்டு தான் இந்தியாவுடன் பேசவேண்டும் அப்போதுதான் இலங்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறினார்

இறக்குவானையில் நடந்த மாநாடொன்றில் அமைச்சர் லலித் கொண்டு பேசினார்

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

இப்படி அமைச்சர் சொன்னார்.

ஆலய செய்திகளில்

மகோற்சவம்

புங்குடுதீவு, மே 19

புங்குடுதீவு பெருங்காடு ரொஞ்சிட்டிபதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

சிவ ஸ்ரீ. வை. மு. ராமலிங்கக் குருக்கள் தலைமையில் கிரிகைகளை நடாத்தினார். பெருந்திரளான பக்தர்கள் இவ்வுற்சவத்தில் கலந்து கொண்டனர்.

இம்மாதம் 23 ஆம்திகதி காலை தொடர்சிவலம் மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்

நவநாள் உற்சவம்

புங்குடுதீவு, மே 19

புங்குடுதீவு புவிதசவேளார் தோணாவரு வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த 11 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது

நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை திருப்பலிப்பூசை ஆராதனையும், திருச்செபமாலையும் இடம் பெறும்

தீவுப் பகுதியின் எல்லாக்கோவில்களிலும் சேர்ந்த பக்தர்கள் இவ்வுற்சவத்தில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

நவக்கிரியில் நிற்றப்மான் திருவிழா

யாழ்ப்பாணம் மே 19

ஞானப்பிரகாச மாமுனிவராலே ஸ்தாபிக்கப்பட்ட நவக்கிரி புவிதநிற்றப்மான் ஆலய திருவிழா இம்மாதம் கொண்டாடப்படவுள்ளது.

நவராத்திரி பூசைகள் இன்று ஆரம்பமாகின்றன. இந்நாட்களில் ப்பூசை 22 ஆம் திகதி விநாயகர் ஊஞ்சலும் 7 மணிக்கு நடைபெறும்.

இந்த நவகிரி நிற்றப்மான் ஆலய திருவிழாவை அருள் திரு பேர்னாட் றெக்ஸ் அடிகளார் தெரிவித்தார்.

மரணச் சபைகள்

சட்டம் ஒழுங்கு அதிகாரங்களை சிக்கலானவை என்கிறார் அத்துலத்

கொழும்பு மே 19

மரணச் சபைகளுக்கு வழங்கப்படவுள்ள சட்டம் ஒழுங்கு அதிகாரங்கள் பற்றிய விஷயத்தில் சிக்கலானதாக உள்ளது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறினதாவது:

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டும்.

தங்கள் இலட்சியத்தை அடைவதற்காக ஆயுதங்களைத் தூக்கிய தீவிரவாதிகளுக்கு [illegible] ஆயுதப்படை [illegible] ஆயுதங்களை [illegible] வேண்டியதான் ஏற்படும்.

அரசியல் தீர்வு ஒன்றுக்கு இலங்கை அரசு முயலவும், தமிழ்க் குழுக்களை விட்டுக் கொடுப்பதாக இல்லை.

சமாதான தீர்வுக்குத் தடையாக இருப்பவை [illegible] அமைச்சர் அத்துலத்முதலி கூறினார்

ஜப்பான் நன்கொடை

டோக்கியோ, மே 18

சிறாக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீடுகளை புனரமைப்புச் செய்வதற்காக இலந்திரங்கள் உதிரிப்பாகங்கள் பாரிய வாகனங்கள் போன்றவற்றை கம்பான் இலங்கை அரசிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இவற்றின் பெறுமதி 70 கோடி ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்
T'Phone: 22477

உதயன்

19 05 1986 திங்கட்கிழமை

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்
புண்ணிய நீராட்டு விழா—புதுமனை புகுவிழா
போன்ற மங்கள வைபவங்களைத்
தத்ரூபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 22477

இனப்பிரச்சினை:

பேச்சுநடந்தால் மட்டுமே மேலதிகமாக விளக்கங்கள் தரப்படும்!

இலங்கை இந்திய, அரசுக்குத் தெரிவிப்பு

புதுடில்லி, மே 18

இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடந்தால் மட்டுமே, இலங்கை தனது புதிய யோசனைச் சம்பந்தமாக விளக்கங்கள், விபரங்களை இந்தியாவுக்குத் தெரிவிக்கும்.

இலங்கை அரசு இது விஷயத்தை இந்தியாவிடம் தெரிவித்து விடுதாக 'இந்து' பத்திரிகையில் அரசியல் விமர்சகர் திரு ஜி கே ரெட்டி எழுதியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

இலங்கை இனிமேல் தனது யோசனைகளான மேலதிக விளக்கங்கள், விபரங்களை பேச்சுவார்த்தை நடத்தாமல் அப்போது நான் சமர்ப்பிக்கும்.

அந்த முன்னர் ஆயத்தமான விளக்கங்கள், விபரங்களை இந்தியாவிடம் சமர்ப்பிக்கும் இலங்கை தனது உறுதிமொழிகளில் இருந்து பின்வாங்கவும் செய்து விட்டது.

இந்தியா பேசாது

தமிழின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடியதான யோசனையை இலங்கை சமர்ப்பிக்காதவரை, இந்திய தமிழர் அமைப்புக்களுடன் பேசமாட்டாது.

இலங்கையில் புதிய யோசனையை இந்தியா இன்னும் தமிழுக் தலைவர்களுக்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

இலங்கை அரசு இந்தியாவுக்கு உணர்த்தி விட்டது.

ஒரு குழுவாக கொண்டு வர கோரிக்கை

இப்போது தமிழர் அமைப்புக்களை ஒரு குழுவாகக் கொண்டு வரும்படி இலங்கை இந்திய யரசைக் கேட்டுள்ளது.

தமிழின் நியாயமான அபிலாஷைகளை நிர்க்கக் கூடியதான யோசனையை இலங்கையிடம் இருந்து பெற்றுக்கொண்ட தமிழர் அமைப்புக்களை ஒன்றுபட்ட குழுவாக உருவாக்க இந்தியா விரும்புகிறது. இப்படி ஒருவர் டில்லி அரசவட்டாரங்கள் கூறுகின்றன.

யோசனையில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்பப் பதில் யோசனைகளை சமர்ப்பிக்க மறுக்கும்.

இதை இலங்கை அரசு இந்தியாவுக்கு உணர்த்தி விட்டது.

ஒரு குழுவாக கொண்டு வர கோரிக்கை

இப்போது தமிழர் அமைப்புக்களை ஒரு குழுவாகக் கொண்டு வரும்படி இலங்கை இந்திய யரசைக் கேட்டுள்ளது.

தமிழின் நியாயமான அபிலாஷைகளை நிர்க்கக் கூடியதான யோசனையை இலங்கையிடம் இருந்து பெற்றுக்கொண்ட தமிழர் அமைப்புக்களை ஒன்றுபட்ட குழுவாக உருவாக்க இந்தியா விரும்புகிறது. இப்படி ஒருவர் டில்லி அரசவட்டாரங்கள் கூறுகின்றன.

யோசனையில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்பப் பதில் யோசனைகளை சமர்ப்பிக்க மறுக்கும்.

இதை இலங்கை அரசு இந்தியாவுக்கு உணர்த்தி விட்டது.

உள்ளூர் தொலைக்காட்சி

மாணவர் பேரவை விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், மே 19

உள்ளூர் தொலைக்காட்சி சேவை (ரெலிவிஷன் சேவை) ஒரு கட்டமைப்புக்குள் இயங்கவைத்து: அதன் மூலம் நல்லதொரு சேவையை மக்களுக்கு வழங்குவதற்கான முயற்சியை தமிழ் மாணவர் பேரவை எடுத்து வருகிறது

இந்த வெளி சேவையாளரின் தவறான [illegible] இம் முயற்சிகளுக்கு தடையாக [illegible] சமர்ப்பிக்க மறுக்கும் [illegible] சேவையாளர்களுக்கு நாம் தரும் இறுதி அறிவித்தலாகும்.

கூட்டணி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] ஒன்று காணப்படாவிட்டால் அதை அழுத்தமாக உத்தரவாதம் இந்தியா தரும் என்று கூறுகிறது பிரதமர் இந்திரா காந்தி என்னிடம் கூறியிருந்தார்

தமிழர் மீதான கொடுமைகள், கொலைகள் நிறுத்தப்பட வேண்டும். இதுவே இன்றைய அவசரத் தேவை

தமிழீழம் உருவானால் அதை யார் ஆட்சி செய்வது என்பதை தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்வார்கள்!—

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

நடைபவனி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோதிய முன்னாள் போராளிகள் உயிரிழந்தார்கள் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதம் சரியாகத் தெரியவில்லை

நேற்று நிகழ்ந்த மோதலில் ரெலோவைச் சேர்ந்தவர்கள், வைக்குண்டுகள், நிலக்கண்ணி வெடிகள் ஆகியவை பாவிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது

நடைபவனியில் வரும் சிப்பாய்களுக்கு ஹெலிக் கொப்டர்களும், கிரிய குண்டு வீச்சு விமானங்களும் வானத்தில் வட்டமிட்டவாறு பாதுகாப்பு அளித்து வருகின்றன

ரெலோ தொடையாக வரும் சிப்பாய்கள் விதிவரவிட்டு இறக்கி அவர்கள் உள்ள வளவுகள், காணிகள் வழியாக நடந்து வருவதாகச் சொல்லப்படுகிறது

சிப்பாய்கள் முன்னேறி வரும்போது இரு மருங்கிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு வருவதாகவும் —

இவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்தது.

வெளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய அதிகாரிகளும் தெரிவித்துள்ளர்.

இதன் காரணமாக முன்கூட்டியே ஆகக் கூடிய பணிகளை செய்து முடிக்கும் நேற்று நிறுத்தி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பில்

பல்கலைக்கழக மாணவர் இரண்டு பேர் கைது!

மட்டக்களப்பு, மே 19

மட்டக்களப்பு வாகரத்திக் [illegible] ஞானப்பிரிவில் முதலாம் ஆண்டு கல்வி பயிலும் இரண்டு மாணவர்கள் நேற்று பிரதேச [illegible] ராக் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு—செங்கலடிச்சந்தி, கொழும்பு நெடுஞ்சாலம் ஆகிய இடங்களில் நேற்றுக்காலை 2 மணி நேரம் நடாத்தப்பட்ட சிப்பாய்கள் அங்கு திடீரென்று ஒன்றிக் வைத்து இரண்டு மாணவர்களையும் கைது செய்தனர்.

[illegible] ஆகிய இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டனர்.

சிப்பாய்கள் இவர்கள் அணிந்திருந்த சேர்ட்டுடன் கழற்றி அதனால் அவர்களது கண்களைக் கட்டி, அவர்களைக் கொண்டு சென்றதாகச் சொல்லப்படுகிறது

பொராளிக்கு இறுதி மரியாதை

நல்லூர், மே 19

வீரமரணமடைந்த விடுதலை போராளிக்கு யாழ்நகர் மக்கள் நேற்று இறுதி மரியாதை செய்தனர்

காலஞ்சென்ற இப்போராளியுடன் நடந்த நேரடி மோதலின்போது பலியான விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவருக்கே மக்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

இறந்த சகபிரதிப் வெட்டியினால் வைக்கப்பட்டு கொண்டுத்துணியால் மூடப்பட்டு யாழ் டல்லியத்திற்கு சற்றுச் சமீபமாக நேற்று வைக்கப்பட்டிருந்தது

ஏராளமான பொதுமக்கள் இவரது சடலத்திற்கு அஞ்சலி செலுத்தினர்

யாழ் நோக்கி படை எடுப்பு!

கொழும்பு, மே 19

ஒன்றை, வவுனியா முகாம்களில் நற்போதத்தகியுள்ள சுமார் 2000 இராணுவச் சிப்பாய்கள் யாழ்ப்பாணம் நோக்கி நடைபவனியில் செல்வர்

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

விளையாட்டரங்கு

சிறுப்பிட்டி ஜனசக்திக்கு செல்வா நினைவு கேடயம்

சாவகச்சேரி, மே 19

அறவழிப் போராட்டக் குழுவினரால் வடமராணாரியில் நடாத்தப்பட்ட செல்வா நினைவுக் கேடயத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டு இம்மாதம் 3ஆம் திகதி முதல் நடைபெற்றுவந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி நடாத்தி செல்வா நினைவுக் கேடயத்தைப் பெற்றது

24 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய இச் சுற்றுப்போட்டிகள் நுணாவில் சனசமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெற்றன

பத்தாம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகத்துடன் நாவற்குழி விளையாட்டுக் கழகம் மோதியது.

சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகம் முதல் இரு ஆட்டங்களையுமே வென்று வெற்றிவாகை சூடிக்கொண்டது

15:5, 15:3 என்ற ரீதியில் புள்ளிகள் பெற்றன.

இரண்டாம் இடத்துக்கான போட்டியில் நாவற்குழி விளையாட்டுக் கழகமும் வைரமுடி நவரத்தினம் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றின.

16 | 14 15 | 11 என்ற ரீதியில் புள்ளிகளைப் பெற்று நாவற்குழி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் திரு வி. எம். துரைராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்ச்சியில் செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணியின் ஆணையாளர் திரு கி. எம். [illegible] பிரேமவிஜயம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கேடயத்தையும், பெட்டிகளையும் வழங்கினார்

சிறுப்பிட்டிக் குழுவின் தலைவர் எம். பாலசுந்தரம் வெற்றிக் கேடயத்தையும், நாவற்குழி குழுவின் தலைவர் எம் சதாசிவமூர்த்தி, நவரம் குழுவின் தலைவர் எம் மகாலிங்கம் ஆகியோர் பெட்டிகளையும் பெற்றுக்கொண்டனர்.

சாவகச்சேரி ப. நோ. கூ. ச. இயக்குநர் தலைவர் திரு. எம். வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அடுத்த மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

கொழும்பு, மே 19

ஜூலை முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

15 ரூபா முதல் 150 ரூபாவரை சம்பளஉயர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது

150 தரக்கணக்கில் உள்ள சுமார் 5 லட்சம் அரச ஊழியர் இச்சம்பள உயர்விலும் நன்மை பெறுவர்.

1986 ஜனவரி மாதத்திலிருந்து இச் சம்பள உயர்வு வழங்கப்படுவதாகக் கருதப்படும் என்று அறிவிக்கப்படுகிறது

கீழ்நிலையில் சம்பளம் 550 ரூபாவில் இருந்து 600 ரூபாவாகவும், எழுதுவினைஞர்களின் சம்பளம் 645 ரூபாவில் இருந்து 700 ரூபாவாகவும் உயர்த்தப்படும்.

நாட்சம்பள ஊழியர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படுகிறது

புதிய சம்பளத்திட்டம், ஆலோசனை சம்பளத்திட்டம் விரைவில் இருக்கும் நிலையை நீக்குகிறது

விரைவில் நிலையில் இருந்து குறி பிட்ட சம்பளம் ஒன்றைப் பெற்று வந்த அரச ஊழியர்கள் புதிய திட்டத்தின்கீழ் வருடாந்த சம்பள உயர்வு பெறத் தகுதியாவர்.

ஆரம்ப சம்பளத்தில் அதிகரிப்பும் பெறாத ஊழியருக்கு மேலதிக வருடாந்த சம்பள அதிகரிப்பு ஒன்று வழங்கப்படும்.

சிற்றூழியர்தர ஊழியர்களுக்கு ஏழரை ரூபா, பத்து ரூபா, 20 ரூபா, 30 ரூபாவரை வருடாந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

எழுதுவினைஞர்கள், நடத்தையர், சிறுப்பிரிவுகள், மொழிபெயர்ப்பாளர் ஆகியோருக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பு 15 ரூபாமுதல் 30 ரூபா வரை இருக்கும்.

உயர்தர ஊழியருக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பு 50 ரூபாவில் இருந்து 100 ரூபாவாக உயர்த்தப்படும். 60ரூபா சம்பள அதிகரிப்பு 120 ரூபாவாக உயர்த்தப்படும்.

மாயமாய்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாயமாக மறைந்தன!

பிரிமா மா ஆலையில் அரைக்கப்பட்ட மா, மூடையாக்கப்பட்டு விசேட வாகனங்களில் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அவை வாகனிலிருந்து இறக்கப்பட்ட மூடைகளைப் பார்த்த போது 43 மா மூடைகள் மாயமாக மறைந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணை நடாத்தி வருகிறார்கள்.

வயாவிளான்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வலம் கற்றி காவல் இருக்கும் போராளிகள் தாக்குதல் நடாத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

இதனால் பலாலி முகாமில் இருந்து மேலும் அதிகமான சிப்பாய்கள் வயாவிளான் நோக்கி வந்தனர்.

அவர்கள் நோக்கியும் போராளிகள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்

குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டரும் மேலே வட்டமிட்டு சிப்பாய்களுக்குப் பாதுகாப்பு அளித்தன.

பலாலி முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்கள் மீண்டும் முகாமிற்கு திரும்பிச் சென்றனர்.

முகாமிற்கு திரும்பிச் சென்ற சிப்பாய்கள் குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இதனால் பல வீடுகளும் சேதமடைந்தன.

வயாவிளான் பகுதி மக்கள் [illegible] வெளியேறி [illegible] சென்றனர்.

இராணுவ ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் நடாத்தி வருவதே இராணுவவண்டித் தொடர் நடுவில் அகப்பட்டுக் கொண்டதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இச்சம்பவம் குறித்துச் சொல்லப்படுவதாவது:-

நேற்று அதிகாலை 6 30 அளவில் கோட்டை பின்புற வீதி வழியாக இரண்டு கவசவாகனங்கள், ஒரு டிரக், நற்றும் நீல நிற ஈ எல் எல். வான் ஒன்று ஆகியவற்றில் படையினர் ஊர்காவற்றுறைப் பக்கமாகச் சென்றனர்

மண்டை தீவுச் சந்திக்கு அருகில் போராளிகள் அவர்களை எதிர்கொண்டு குண்டுகளை வீசித் தாக்கியதாகக் கூறப்படுகிறது

இராணுவ வண்டித் தொடர் வந்த வழியே திரும்பியது.

எனினும் பண்ணை சந்திலிப் பாதைத்திக்கு அருகில் வண்டித் தொடர் வந்தபோது ஆங்கே நோக்கி போராளிகள் தாக்குதல் மேற்கொண்டார்கள்.

கோட்டை முகாமுக்கு எதிர்க்கரையிலிருந்தே போராளிகள் தாக்குதல் கள் மேற்கொண்டனர்.

பண்ணைப் பாதைத்திலிருந்து சுமார் 50 யார்களுக்கு அப்பால் தாக்கு வண்டிகளும் நேற்றைய காண்முறல் செய்தி அக்கரைப் போகும் வரை நிலைத்திருந்தன.

இந்த கோட்டை முகாமிலிருந்து ஒரு [illegible] போராளிகள் தாக்குதல் [illegible] மேற்கொண்டனர்.

[illegible] பாதைத்திலிருந்து சுமார் 50 யார்களுக்கு அப்பால் தாக்கு வண்டிகளும் நேற்றைய காண்முறல் செய்தி அக்கரைப் போகும் வரை நிலைத்திருந்தன.

இந்த கோட்டை முகாமிலிருந்து மாலை [illegible] ஹயர் வியூ இராணுவ முகாமிலிருந்து மாலை [illegible] சென்றனர்.

தியேட்டர்களிலும் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, மே 19

நேற்று இலங்கையில் உள்ள தியேட்டர்களும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

பார்சல்களுடன் வருபவர்கள் படம் பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்று தியேட்டர் நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

தியேட்டர்களுக்குள்ளும் குண்டுகள் வைக்கப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆக்கரைப்பற்றில் பெரும் பதற்றம்

மட்டக்களப்பு, மே 19

ஆக்கரைப்பற்றில் நேற்று இரவு 9-45 மணியளவில் ராபி என்னர் இனந்தெரியாத சிலரால் சுட்டுக்கொல்லப்பட்டார் போராளி அமைப்பு ஒன்றில் இவர் முன்னர் இருந்ததாகவும் —

பின்னர் அதனிலிருந்து விலகிச் செயற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது

இவர் கொலை செய்யப்பட்டதால் ஆக்கரைப்பற்றில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது

முப்படைத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஓரிசமயத்தில் புறப்பட்டனர்.

எனினும் அனைத்து இடங்களிலும் ஒரே சமயத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட நேரடித் தாக்குதலினால் — எதுவீரர்களின் தீரம், நியாயத்தால் — இராணுவத்தினர் அனைத்து இடங்களிலும் முறியடிக்கப்பட்டு பின்வாங்கினர்.

நேற்றுக்காலை கலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியாகிய நாலாம் கட்டை இராணுவத்தினர் புறப்பட்ட சமயம் நாம் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் அந்த இடத்தில் பலியானார்கள் மேலும் காயமடைந்தனர்.

தொடர்ந்து கடிதுவிலை நோக்கி வாகனங்கள் சகிதம் நகர்ந்த இராணுவத்தினரை தொகை நடத்திய ரெக்கிக் தாக்குதலில் ஒர் நவீனரக இராணுவவாகனம் முற்றாக சேதமடைந்தது. பல இராணுவத்தினர் பலியானார்.

இதே நேரடி மோதலால் இராணுவத்தினர் முறியடிக்கப்பட்டு முன்னேற முடியாமல் பின் வாங்கினர்.

இந்த நேரடி மோதலில் வெற்றிக்காக இறுதி வரை போராடிய எமது வீரனான [illegible] (ஊர் காவற்றுறை) வீரமரணமடைந்தான்.

இந்த போன்று நேற்று நல்லூர் ஆலயடி வீது இராணுவ முகாமிலிருந்து மாவிட்டபுரத்தை கடிக்க வந்த நாற்றுக்கணக்கான இராணுவத்தினரை நேருக்கு நேர் எதிர்கொண்டு இறுதி வரை போராடிய எமது வீரர்களாக இராணுவம் ஓடஓட விரட்டி அடிக்கப்பட்டது. இத் தாக்குதலில் பல இராணுவத்தினர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர்.

இதே போன்று நேற்று காலை காரைநகர் கடற்படை முகாமில் இருந்து கருவிகள் பகுதிய அழிக்க சுமார் நூறு கடற்படையினர் அணியில் வந்தனர். இவர்களுக்கு உதவியாக இரண்டு ஹெலிக்கொப்டர்களில் அதிரூபப்படையினர் வந்திறங்கினர். இவர்கள் அனைவரையும் நேருக்கு நேர் எதிர்கொண்டு எமது வீரர்கள் போராடி முன்னேற முடியாமற் செய்து பின்வாங்க வைத்தனர்கள். இந்த நேரடி மோதலில் ரஞ்சித் (கல்லூர்) மக்களுக்காக வீரமரணமடைந்தார்.

இதேபோன்று நேற்றுக் காலை கோட்டை இராணுவ முகாமிலிருந்து மண்டைதீவை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீதான நேரடி மோதலில் பல இராணுவத்தினர் பலியானார்

இராணுவம் தொடர்ந்து முன்னேற முடியாமல் பின் வாங்கியது.

இந்த போன்று ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து 40 நவீனரக இராணுவ வாகனங்களுடன் தன ஒழிப்பிற்காக புறப்பட்ட பல நாற்றுக்கணக்கான இராணுவத்தினருடன் எமது வீரர்கள் புரிந்தது கழிக்க வந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை நேருக்கு நேர் எதிர்கொண்டு இறுதி வரை போராடிய எமது வீரர்களாக இராணுவம் முற்றாக தகர்க்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்த நேரடி மோதலால் இராணுவம் முன்னேற முடியாமல் தடுமாறியது

இந்த தாக்குதலில் இராணுவத்தினரை முறியடிக்க இறுதி வரை போராடிய எமது வீரர்களான [illegible], ரகு, ஜோதிரவி ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

நேற்றைய தினத்து இராணுவ முகாம்களின் தும் முப்படைகளினதும் தாக்குதலையும் நாம் வெற்றிகரமாக முறியடித்த அதே வேளையது தோழர்கள் ஜவர் எம்மக்களை பாதுகாக்க தம் உயிரை இம் மண்ணுக்கு ஈந்தனர்.

வீரமரணமடைந்த தோழர்களான ரகு, [illegible], ரஞ்சித், கோகுல் ஆகிய ஐவருக்கும் நாம் வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

ஆதேவேளை நிலம் நிலம் நாம் பலம் குன்றாமலும் எம் மக்களை நிச்சயம் பாதுகாப்போம் என்பதையும் எமது இரத்தங்கள் இம் மண்ணையும் மக்களையும் நிச்சயம் பாதுகாத்துக் கொண்டே இருக்கும் என்பதையும் உறுதியாக கறி வைக்கிறோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

ஸ்டிக்கர்கள்

கொழும்பு, மே19

'இலங்கை ஆயுதப்படையினரை நேசிக்கிறோம்'- இப்படி அச்சிடப்பட்ட வண்ண 'ஸ்டிக்கர்'கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன

ஒரு 'ஸ்டிக்கர்' பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

இராணுவ சேவா வனிதா பரிவு இதனை ஒழுங்கு செய்கிறது.

காளி கோயில் சேதமாக்கப்பட்டது

கொழும்பு, மே 19

கொட்டாஞ்சேனை சங்கமித்த மாவத்தையில் உள்ள காளி கோயில் சேதமாக்கப்பட்டது. அக்கோயிலின் பூசகரான முனிதாஸ என்ற சிங்களவரும் தாக்கப்பட்டார்.

கதிர்காமத்துக் கால்நடைகளுக்கு ஆளான பூசகர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இனந்தெரியாத கோஷ்டி ஒன்றே இச் செயலைச் செய்ததாகக் கூறப்படுகிறது. இதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

[illegible] சமரில் ஈடுபட்டனர். இரண்டு தனியார் இராணுவ வாகனங்கள் முற்றாக தகர்க்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்த நேரடி மோதலால் இராணுவம் முன்னேற முடியாமல் தடுமாறியது

இந்த தாக்குதலில் இராணுவத்தினரை முறியடிக்க இறுதி வரை போராடிய எமது வீரர்களான ஆதிகுமார், ஜோதிரவி ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

நேற்றைய தினத்து இராணுவ முகாம்களின் தும் முப்படைகளினதும் தாக்குதலையும் நாம் வெற்றிகரமாக முறியடித்த அதே வேளையது தோழர்கள் ஜவர் எம்மக்களை பாதுகாக்க தம் உயிரை இம் மண்ணுக்கு ஈந்தனர்.

வீரமரணமடைந்த தோழர்களான ரகு, [illegible], ரஞ்சித், கோகுல் ஆகிய ஐவருக்கும் நாம் வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

ஆதேவேளை நிலம் நிலம் நாம் பலம் குன்றாமலும் எம் மக்களை நிச்சயம் பாதுகாப்போம் என்பதையும் எமது இரத்தங்கள் இம் மண்ணையும் மக்களையும் நிச்சயம் பாதுகாத்துக் கொண்டே இருக்கும் என்பதையும் உறுதியாக கறி வைக்கிறோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இணுவில் ஒழுங்கை, 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் அச்சகத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

வெளியிட்ட திகதி: 19 - 05 - 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd: 15, Second Lane Power House Road, Jaffna

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka, under number [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org